விசேட ஒருங்கிணைப்பாளர் டொட் புச்வேல்ட் மற்றும்இராஜாங்க திணைக்களத்தின் பிரதிஉதவிசெயலாளர் மன்பிரீட் அனன்டும் இலங்கை;கான தங்களது விஜயத்தை பூர்த்திசெய்துள்ளனர்.

ஏப்பிரல்6 2016-சர்வதேச குற்றவியல்
நீதிக்கான  இராஜாங்கஅலுவலகத்தின் அமெரிக்க திணைக்களத்தின் விசேட ஒருங்கிணைப்பாளர் டொட் புச்வேல்டும்,  ; தென்னாசிய மற்றும்மத்திய ஆசியாவிற்கான்இராஜாங்க திணைக்களத்தின் பிரதிஉதவிசெயலாளர் மன்பிரீட் அனன்டும் இலங்கைக்கான தங்களது பல நாள் விஜயத்தை பூர்த்திசெய்துள்ளனர்.இக்காலப்பகுதியில் அவர்கள் அரசாங்க மற்றும் அரசியல் தலைவர்களையும், நாட்டின் பல பகுதிகளையும்சேர்ந்த சிவில் அமைப்புகளின் தலைவர்களையும் நல்லிணக்கம் குறித்து அறிந்துகொள்வதற்காக சந்தித்தனர்.
இலங்கைமக்கள் அரசியல்அமைப்பு சீர்திருத்தங்களையும்,சமாதானம் , செழிப்பு மற்றும் நல்லிணக்கம் நிலவுகின்ற எதிர்காலத்தையும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ள இந்த முக்கியமான தருணத்தில் இலங்கை அரசாங்கம் அந்தமக்களிற்கு உதவமுயல்கின்றது என அமெரிக்க தூதுவர் அதுல்கெசாப் தெரிவித்தார். நல்லிணக்கம் தொடர்பான இலங்கையின் பல தரப்பட்ட குரல்களை செவிமடுப்பது,எதிர்வரும் வருடங்களில் இலங்கை தொடர்பான உதவிகளையும் கொள்கைகளையும்வடிவமைப்பதற்கு இவர்களிற்கு முக்கியமானதாக விளங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.
தூதுவர் கெசாப்பும், டொட் புச்வேல்டும் நல்லிணக்கத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து அறிந்துகொள்வதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீரவையும்,மற்றும்  வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயையும் சந்தித்தனர்.இதன் பின்னர் டொட் புச்வேல்ட் எதிர்கட்சி தலைவர் சம்பந்தனை சந்தித்தார்,அவர்யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் எதிர்கொள்ளும் விவகாரங்கள் பற்றி தெளிவுபடுத்தினார்.இதன் பின்னர் - இருவரும் நல்லிணக்கம் மற்றும் வாழ்வாதாரம் தொடர்பாக வடக்கில் காணப்படும் சவால்கள் தொடர்பாக ஆராய்வதற்காக வடமாகாணமுதலமைச்சர் சிவிவிக்னேஸ்வரனை

சந்தித்தனர்.புச்வால்ட் கிழக்கு மகாண முதலமைச்சர் ஒஸ்டின்பெர்ணாண்டேவையும் சந்தித்தார்.
புச்வால்ட் மற்றும் அனன்ட் இருவரும் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டனர்,அங்கு அவர்கள் இளைஞர்கள் மற்றும் சிவில்சமூக தலைவர்களையும் சந்தித்தனர்,தலதா மாளிகைக்கு சென்று மரியாதை செலுத்தினர்,இதன் பின்னர் புச்வால்ட் திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் சென்று அனைத்து மதங்களின் தலைவர்களையும் சந்தித்தார்,இது தவிர உள்ளூராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,மாணவர்கள், சிவில் சமூக அமைப்புகள்,ஆகியவற்றையும் சந்தித்து தொடர்ந்தும் நல்லிணக்கம் குறித்து ஆராய்ந்தனர்.
இலங்கையின் நிலை குறித்து  முன்னோக்கினை வழங்ககூடிய பல்வேறு தரப்பட்டவர்களின் குரல்களினை செவிமடுக்க முடிந்தமை பயனுள்ளதாக அமைந்திருந்தது,நாங்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளிற்கு விஜயம் மேற்கொண்டு,அங்கு காணப்படும் நிலவரம் மற்றும் சவால்கள்குறித்து நேரடியாக அறிந்துகொண்டோம் எனபுச்வால்ட் தெரிவித்தார்.



1.  விசேட ஓருங்கிணைப்பாளர் டொட் புச்வேல்ட் மற்றும்இராஜாங்க திணைக்களத்தின் பிரதிஉதவிசெயலாளர் மன்பிரீட் அனன்டு தூதுவது அதுல் கெசாப்பும் வடமாகாண முதலமைச்சருடன் நல்லிணக்க மற்றும் வாழ்வாதார சவால்கள் குறித்து ஆராய்ந்தனர்.




2. சர்வதேச குற்றவியல் நீதிக்கான  இராஜாங்கஅலுவலகத்தின் அமெரிக்க திணைக்களத்தின் விசேட ஒருங்கிணைப்பாளர் டொட் புச்வேல்டும், ; தென்னாசிய மற்றும்மத்திய ஆசியாவிற்கான்இராஜாங்க திணைக்களத்தின் பிரதிஉதவிசெயலாளர் மன்பிரீட் அனன்டும்; கண்டியில் உள்ள அமெரிக்கன் நிலையத்தில் இளைஞர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.



3. சர்வதேச குற்றவியல் நீதிக்கான  இராஜாங்கஅலுவலகத்தின் அமெரிக்க திணைக்களத்தின் விசேட ஒருங்கிணைப்பாளர் டொட் புச்வேல்டும், ; தென்னாசிய மற்றும்மத்திய ஆசியாவிற்கான்இராஜாங்க திணைக்களத்தின் பிரதிஉதவிசெயலாளர் மன்பிரீட் அனன்டும்திருகோணமலையில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணாண்டோவை சந்தித்து உரையாடினார்.



4.  விசேட ஒருங்கிணைப்பாளர் டொட் புச்வேல்ட்வடக்கின் இளைஞர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை சந்தித்து உரையாடினார்



5. விசேட ஒருங்கிணைப்பாளர் டொட் புச்வேல்ட் மற்றும்இராஜாங்க திணைக்களத்தின் பிரதிஉதவிசெயலாளர் மன்பிரீட் அனன்டும் எதிர்கட்சி தலைவர் சம்பந்தன்மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை சந்தித்து உரையாடினர்.